**கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டத்தூர் கிராமம் மற்றும் மேட்டத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**

முன்னிலை : ஊராட்சி மன்ற தலைவர் திரு.சி,சாந்தசீலன்

தீர்மானம் எண் : 72/2024 நாள்- 11/03/2024

பொருள் : உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை வட்டம் - திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் - மேட்டத்தூர் கிராமம் ச.எண். 41/3A2, 41/2B2 - இடத்தில் 0.83 ஏக்கர் (அ) 3356.00 ச.மீ – பரப்புளவு இடத்தில் அமைந்துள்ள் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குதல் குறித்து

பார்வை :

1. மனுதாரர் திரு J.சதிஷ் குமார் அவர்களின் விண்ணப்பம் நாள் -05/02/2024
2. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் - 04.05.2017.
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக ROC No:7TDOJ8GW/19152/TCP/2023 (ம) மனைப்பிரிவு அனுமதி எண்: ம.வ/ந.ஊ.உ.இ(க.மா)எண் : 006/2024 நாள் - 11.01.2024
4. சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், திருநாவலூர் தானபத்திர ஆவண எண்: 87/2024 நாள் - 09/01/2024
5. கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது. E- Challan நாள்: 03/05/2024 மற்றும் E- challan - DTCP - 14/05/2024

உத்தரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - கள்ளக்குறிச்சி மாவட்டம்- உளுந்தூர்பேட்டை வட்டம் - திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் - மேட்டத்தூர் கிராமம் ச.எண்: 41/3A2, 41/2B2 - இடத்தில் 0.83 ஏக்கர் (அ) 3356.00 ச.மீ - பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3-ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)-ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 4-ல் சுட்டியபடி சாலை, மூலை முடுக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண்: 87/2024 நாள்: 09/01/2024- ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானபத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் சுட்டியபடி பார்வை (5)-ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நிலப்பயன் மாற்று கட்டணம் 1,75,000/- என்று E-challan வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு நாள் : 03/05/2024 மற்றும் 23,000/- DTCP- E-challan 14/05/2024 உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவுக்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி மேட்டத்தூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்: 72/2024 நாள்- 11/03/2024

-என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதல் உடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சமந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின் படி உள்ளாட்சி சட்டங்களின்படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொதுத்துறையில் இருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானபத்திர நகலுடன் சமந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
3. நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
4. சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு மரம் ஒன்று நட்டு பராமரிக்கப்பட்ட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேட்டத்தூர் கிராமம் ச.எண். 41/3A2, 41/2B2 - இடத்தில் 0.83 ஏக்கர் (அ) 3356.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மேட்டத்தூர் ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

திரு.சி.சாந்தசீலன்
ஊராட்சி மன்ற தலைவர், மேட்டத்தூர் ஊராட்சி,
திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம்,
உளுந்தூர்பேட்டை வட்டம், <u>கள்ளக்குறிச்சி</u> மாவட்டம்.

தலைவர்
மேட்டத்தூர் ஊராட்சி.
திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு. J. சதீஷ்குமார்
57, காமராஜர் தெரு ,
பண்ருட்டி , பண்ருட்டி தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்படுகிறது
நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) <u>கள்ளக்குறிச்சி</u> அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்படுகிறது
நகல் : சார்பதிவாளர் திருநாவலூர்
நகல் : வட்டாட்சியர், உளுந்தூர்பேட்டை.